**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல இல்லை என்கிற பதில் இதுவரைக்கும் நமக்குத் தரப்படவில்லை. நாம் அதை வலியுறுத்திக்கொண்டு வருகிறோம் தொடர்ந்து வலியுறுத்துவோம். வராமல் போய்விடுமோ என்கிற சந்தேகம் வரத் தேவையில்லை இங்கே தொடங்கவேண்டும் என்பதை நாம் தொடர்ந்து வலியுருத்தி வருகிறோம். இங்குதான் தொடங்கப் படும் என்று நம்புவோம்.

**திரு. என். வரதராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தில் மத்திய அரசு பல்வேறு தொழிற்சாலைகளைத் துவங்கியிருக்கிறது. குறிப்பாக, நெய்வேலி, சேந்த போட்டோ தொழிற்சாலை போன்றவையாகும். இதிலே எல்லாம் மாநில அரசு சமபங்கு மூலதனம் போட்டு, அதிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களின் வினியோகம் போன்றவற்றி லும் ஆலோசனை அளிக்கும் வகையில் உரிமைகள் வழங்க வேண்டும் என்று தமிழக அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளை ஆரம்பிக்கின்ற நேரத் தில் மைய அரசு அதனுடைய நிதி ஆதாரங்களின் அடிப்படை யில் செய்கிறது. அப்படிச் செய்கிற நேரத்தில் அவர்கள் ஏறத்தாழ 200 கோடி, 300 கோடி 500 கோடி, என்று மூலதனம் போட்டு ஆரம்பிக்கிறார்கள். அதிலே பாதி மாநில அரசு ஏற்றுக்கொள்வது என்பது மாநில அரசின் நிதி ஆதாரங்களுக்கு இயலாத ஒன்றாகும். ஆகவேதான் மாநில அரசைப் பொறுத்தவரையில், எந்த மாநிலத் திலும் இந்தத் திட்டம் வற்புறுத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக மத்திய அரசு திட்டங்கள் அமைக்கின்ற நேரத்தில் அதை ஒவ்வொரு மாநிலமும் தன்னுடைய மாநிலத்தில் அமைக்கவேண் டும் என்று வற்புறுத்துகின்றன. நாமும் அந்த வகையில் வலி யுறுத்தி வருகிறோம். அப்படி செய்து வருவதன் மூலம் மாநிலத் தில் தொழில் வளர்ச்சியும் அதிகமாக்க முடியும்.

**ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் ஆஸ்பெஸ்டாஸ் ஓடு உற்பத்தி செய்யும் திட்டம்.**

* வினா எண் 298—**திரு. வி. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஆலங்குளத் திலுள்ள சிமென்ட் ஆலையில் புதியதாக ஆரம்பிக்கப்படவிருக் கும் ஆஸ்பெஸ்டாஸ் ஆலை எப்பொழுது ஆரம்பமாகும்?

(ஆ) அத்தொழிற்சாலையின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) தொழிற்சாலையை கட்ட நிலம் கொடுத்தவர்களில் எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது?

(ஈ) மொத்தம் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

*1982 மார்ச் 1*

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ—ஈ). தலைவர் அவர்களே, இந்த ஆலை வர்த்தக ரீதியான உற்பத்தியை 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் முதல் தொடங்கியது. இதற்கான மதிப்பீடு சுமார் ரூபாய் 2½ கோடி. ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலை கட்ட யாரும் நிலம் கொடுக்கவில்லை. ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை கட்ட நிலம் கொடுத்தவர்களில்—10 ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் கொடுத்தார்கள்—80 பேர்களுக்கு இந்த ஆலையில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் சுமார் 220 பேர்களுக்கு இந்த ஆலையில் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த ஆலங்குளம் சிமெண்ட் ஆலைக்கான நிலம் கொடுத்தவர்கள் பலர் இன்றைககு வேலை வாய்ப்பு இல்லாமல் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அப்படி பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அதிகமாக இருப்பதால் அவர்களுக்கு முன்னுரிமை அளித்து வேலை வாய்ப்பு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொன்னேன். ஏற்கெனவே சிமெண்ட் ஆலை ஏற்படுத்துவதற்காக 10 ஆண்டு காலத்திற்கு முன்பு நிலம் கொடுத்தவர்களுக்கு, சிமெண்ட் தொழிற்சாலையில் முன்னுரிமை கொடுத்து இருக்கிறோம். அப்போது வேலை கேட்டு மனு செய்தவர்கள் 420 பேர்கள். அவர்களில் 220 பேர் தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்கள். இன்னும் ஆட்கள் எடுக்கிற போது, இதே அடிப்படையில், நிலம் கொடுத்தவர்களுக்கு முன்னுரிமை அளித்து வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, சிமெண்ட் குழாய்கள் தயாரிக்கும் தொழிற்சாலை எங்கே அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் கூட, இந்த நிறுவனம் சிமெண்ட் குழாய்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை திருச்சி மாவட்டத்தில் சுமார் 10 கோடி முதலீட்டில் அமைக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இந்த ஆலங்குளம் சிமெண்ட் ஆலையும், ஆஸ்பெஸ்டாஸ் ஆலையும் ஒரே இடத்தில்தான் இருக்கின்றன. அதற்கு நிலம் கொடுத்தவர்கள் எல்லாம் மிகவும் ஏழை எளிய விவசாயிகள். அவர்கள் இன்றைக்குப் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது அந்த சிமெண்ட் ஆலையின் புகை காரணமாக இருக்கிற நிலத்திலும்

விவசாயம் செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இப்போது அந்த ஆலைக்கு நிலம் கொடுத்தவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த 80 பேர்களுக்குத்தான் வேலை கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். நிலம் கொடுத்த பலர் மனு செய்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அந்த ஆலையில் வேலை கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மனு செய்த எல்லோருக்கும் வேலை கொடுக்க முடியாது. ஆனால் அத்தனை பேர்களுக்கும் நிலத்திற்கான 'காம்பென்சேஷன்' கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் நிலம் கொடுத்தவர்களுக்கு வேலையில் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் 80 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. வேலைக்கு ஆள் எடுக்கும்போது அவர்களுடைய கல்வித் தகுதி, தொழில் துறையில் அவர்கள் பெற்றிருக்கிற படிப்பு, பயிற்சி இப்படிப்பட்ட பல தகுதிகள் அடிப்படையில்தான் ஆள் எடுக்க வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில் நிலம் கொடுத்தவர்களுக்கு வேலையில் முன்னுரிமை கொடுக்கப்பட்டு, வேலைக்கு எடுக்கப்பட்டிருக்கிறார்கள். இனிமேல் ஆள் எடுக்கும்போதும் அந்த அடிப்படையில் முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆதி திராவிடர் மாணவர்களுக்கான அதிக உதவி வழங்கும் திட்டம்.**

***வினா எண் 299—திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் 10 ஆம் வகுப்பில் 60 சதத்திற்கு மேல் மார்க் வாங்கினால் ரூபாய் 300 அதிக உதவி வழங்கும் திட்டம் 1980–81 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** ஆம். இத் திட்டம் 1980–81 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது.

**திரு. என். பழனிவேல் :** தலைவரவர்களே, 10 வது வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு தற்போது அரசு 'ஸ்காலர்ஷிப்' பணமாகக் கொடுப்பதில்லை. அதை புத்தகமாகக் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த புத்தகம் கூட பல இடங்களில் கிடைப்பதில்லை. இந்த நிலையில் 60 சதவீதத்திற்கு மேல் மார்க்